


நாகை மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணிக்கான ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறியாளர் அணி நிர்வாகிகள் பொறுப்பிற்கு கீயூஆர் கோர்டு மூலம் ஆன்லைனில் விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன். மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி.கருணா, துணைச் செயலாளர் எல்..ரவிச்சந்திரன் ஆகியோர் நடத்தினார்கள். உடன் நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, நாகை மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கேஸ் வீ.செந்தில் ஆகியோர் உள்ளனர்.

## 6 மாதத்தில் பட்டா! ஏழை - எளிய மக்களின்

# 63 ஆண்டு காலப் பிரச்சினைக்குத் தீர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் மகிழ்ச்சிப் பதிவு!

சென்னை, பிப்.12-

**ஏழை, எளிய மக்களின் 63 ஆண்டு காலப் பிரச்சினைக்குத் தீர்வாக 6 மாதத்தில் அரசு பட்டாக்கள் வழங்கி சாதனை படைக்கும் என முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மகிழ்ச்சி பொங்க குறிப்பிட்டுள்ளார்.**

நேற்று முன்தினம் (10.02.2025) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு :-

ஏழை, எளிய மக்களின் 63 ஆண்டுகாலப் பிரச்சினைக்குத் தீர்வு!

சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களின் "பெல்ட் ஏரியாக்களில்" ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும் 29,187 பேர்,

மதுரை, நெல்லை உள்ளிட்ட மாநகராட்சிகள் நகராட்சிகள் மாவட்டத் தலைநகரப் பகுதிகளில் 57,084 பேர் என மொத்தம் 86 ஆயிரம் ஏழை, எளிய மக்களுக்குப் பட்டா வழங்க இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளோம்!

6 மாதங்களில் இதனைச் செய்துமுடிக்க இரண்டு குழுக்களையும் அமைக்கவுள்ளோம்!

உங்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரை 12,29,372 பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## பெண்கள் தலைமையிலான சிறு-குறு நடுத்தர

# தொழில் நிறுவனங்கள் அதிகரிக்க ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன?

## மாநிலங்களவையில் - எம்.எம்.அப்துல்லா கேள்வி!

புதுடெல்லி, பிப். 12-



பெண்கள் தலைமையிலான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை அதிகரிக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா கேள்வி எழுப்பினர்.

மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா எழுப்பிய கேள்வி வருமாறு:-

அதில் "கடந்த மூன்று ஆண்டுகளில் மாநில வாரியாக உத்யம் இணையத்தளத்தில் பதிவு செய்யப்பட்ட பெண்கள் தலைமையிலான குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்க ளுக்கான மொத்த நிலுவையில் உள்ள கடன்களில் 7% மட்டுமே பெண்கள் தலைமையிலான வணிகங்களுக்கு வழங்கப்பட்டது என்பது உண்மையா, அப்படியானால் கடந்த மூன்று ஆண்டுகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன என்றும் பெண் தொழில்முனைவோருக்கு நிதி ஆதாரங்களை எளிதாக அணுக உதவும் ஏதேனும் புதிய கொள்கைகளை ஒன்றிய அரசு செயல்படுத்தப்போகிறதா? என்றும் கேள்விகளை எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த இந்திய ஒன்றிய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்துறை இணையமைச்சர் சோபா கரன்ட்லஜே அவர்கள் "கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 12,45,126 பெண்கள் 'உத்யம்' இணையதளத்தில்தொழில்முனைவோராக தங்களைப் பதிவு செய்து கொண்டுள்ளனர். இந்திய ரிசர்வ் வங்கியின் நிதி உள்ளடக்கம் மற்றும் மேம்பாட்டுத் துறையால் நடத்தப்பட்ட ஆய்வின் படி, மார்ச் 31, 2023 நிலவரப்படி, திட்டமிடப்பட்ட வணிக வங்கிகளின் (வெளிநாட்டு வங்கிகள் மற்றும் கிராமப்புற வங்கிகள் தவிர) நிலுவையில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மொத்த கடனில் பெண்களுக்குச் சொந்தமான நிறுவனங்களின் பங்கு 7.09% ஆக இருந்தது. ரிசர்வ் வங்கி அறிவித்தபடி, பொதுத் துறை வங்கிகள் செயல்படுத்துவதற்காக இந்திய அரசு 2000 ஆம் ஆண்டில் 14 அம்ச செயல் திட்டத்தை வரையறுத்தது. அதன்படி பொதுத்துறை வங்கிகள் தங்கள் நிகர வங்கிக் கடனில் 5 சதவீதத்தை பெண்களுக்குக் கடன் வழங்குவதற்காக ஒதுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. பெண் தொழில்முனைவோர் வங்கிகளை எளிதாக அணுகுவதற்காகவும், பெண் தொழில்முனைவோரை அதிகரிக்கவும் வேண்டியே பெண் தொழில்முனைவோர்களுக்கான காப்பீடு 90% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் பெண் தொழில் முனைவோருக்கு வருடாந்திர உத்தரவாதக் கட்டணத்தில் 10% சலுகை வழங்கப்படுகிறது.

மேலும் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் பண்ணைத் தொழில் அல்லாதவற்றிற்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படுகிறது. திட்டச் செலவில் 15% முதல் 35% வரையிலான மானியத்துடன் உற்பத்தித் துறையில் ரூ.50 லட்சம் வரையிலும், சேவைத் துறையில் ரூ.20 லட்சம் வரையிலும் கடன் வழங்கப்படுகிறது.

பெண்கள் உட்பட சிறப்புப் பிரிவுகளைச் சேர்ந்த பயனாளிகளுக்கு கிராமப்புறங்களில் 35% மற்றும் நகர்ப்புறங்களில் 25% ஆகவும் மானியம் வழங்கப்படுகிறது" என்று தெரிவித்தார்.

இவ்வாறு எம்.எம்.அப்துல்லா கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.





ஓரவஞ்சனையான நிதிப் பகிர்வு, ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரைக் கூட உச்சரிக்காதது என, நிதிநிலை அறிக்கையிலும் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த மோடி அரசைக் கண்டித்து கண்டன பொதுக்கூட்டம் கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் குனியமுத்தூர் பகுதியில் நடைபெற்றது. கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி தலைமை தாங்கி, கண்டன உரை ஆற்றினார். கழக துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., கழக தலைமைக் கழக பேச்சாளர் சேப்பாக்கம் பிரபாகரன், கே.ஈஸ்வரசாமி எம்.பி. ஆகியோர் கண்டன உரையாற்றினர். இக்கண்டன பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக துணைச்செயலாளர்கள் எம்.என்.செந்தில், ஜெயந்தி, அசோக் ஆறுக்குட்டி, ரஹ்மான் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சி.ஆர். ராமச்சந்திரன் அருண்குமார், முத்துசாமி மற்றும் கழக நிர்வாகிகள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.






தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.2.2025) சென்னை தலைமைச் செயலகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் மதி அனுபவ அங்காடியினை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச. திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், ஆகியோர் உடனிருந்தனர்.

## சென்னை தலைமைச் செயலகத்தில் - மகளிர் சுயஉதவிக் குழுக்களின்

# உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் 'மதி அனுபவ அங்காடி!'

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, பிப். 12-

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.2.2025) சென்னை தலைமைச் செயலகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் மதி அனுபவ அங்காடியினை திறந்து வைத்து பார்வையிட்டார்.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெண்கள் பொருளாதார சுதந்திரம் அடையவேண்டும் என்பதற்காக 1989 ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களை தொடங்கி வைத்தார். மகளிரின் முன்னேற்றத்திற்காக, துவங்கப்பட்ட இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தியதின் காரணமாக பிற மாநிலங்களாலும் பின்பற்றப்பட்டு பெண்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு ஒரு முன்னோடி திட்டமாக விளங்குகிறது.

முதலமைச்சர் அவர்கள் சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அத்திட்டங்களின் பயனாக இன்று சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வருவாய் ஈட்டி, பொருளாதார சுயசார்பு பெற்று வருகின்றனர்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வகையிலும், அவர்களின் தயாரிப்புப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், மாநில, மாவட்ட, வட்டார அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகள், மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள், மதி அங்காடி, மதி இணையதளம், மதி சிறுதானிய உணவகம் மற்றும் இயற்கைச் சந்தைகள் என பல்வேறு செயல்பாடுகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வருவதன் காரணமாக இன்று சுய உதவிக் குழுக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, "மதி அனுபவ அங்காடி" (MATHI Experience Store) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் துணை முதலமைச்சர் அவர்களால் 18.11.2023 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

மகளிர் சுய உதவிக் குழுவினர் தங்களின் தயாரிப்புப் பொருட்களை நியாயமான முறையில் விற்பனை செய்து, வருமானம் ஈட்டுவது மதி அனுபவ அங்காடியின் தனிச் சிறப்பு. இந்த மதி அனுபவ அங்காடியில் தமிழ்நாட்டில் உள்ள 37 மாவட்டங்களில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மதி அனுபவ அங்காடிக்கு பொதுமக்கள் அளித்த வரவேற்பினைத் தொடர்ந்து, சென்னை தலைமைச் செயலகத்தில் இரண்டாவது மதி அனுபவ அங்காடியினை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.02.2025) துவக்கி வைத்தார்.

இந்த மதி அனுபவ அங்காடியில் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிரால் உற்பத்தி செய்யப்படும் "மதி" என்ற வணிக முத்திரையுடன் கைவினைப் பொருட்கள், கைத்தறி துணிகள், தேன், நாட்டுச்சர்க்கரை, சிறுதானிய உணவு பொருட்கள், அலங்கார பொருட்கள், ஆபரணங்கள், சிலைகள், உணவுப் பொருட்கள், சிறுதானியங்கள் மற்றும் வீட்டிற்குத் தேவையான மளிகைப் பொருட்கள் உள்பட அனைத்துப் பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் ஸ்ரேயா பி.சிங் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

# மகளிர் அணி - மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் க.பொன்முடி - கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு!

## மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், பிப்.12-

விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் இன்று (12.02.2025 - புதன்கிழமை) காலை 10.30 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறுகிறது.

கழக துணைப் பொதுச் செயலாளர், வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, கழக துணைப் பொதுச்செயலாளர் - கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.



மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் திருமதி நாமக்கல் ப.ராணி , மாநில மகளிர் தொண்டர் அணி இணை செயலாளர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், மாநில மகளிர் அணி சமூக வலைத்தள பொறுப்பாளர் முனைவர் அ.ரியா ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் கூட்டத்தில், விழுப்புரம் (தெற்கு) மாவட்ட கழகத்தை சேர்ந்த மாநில - மாவட்ட - ஒன்றிய - பேரூர் - கிளைக் கழக மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் , கழக மகளிர் - மகளிர் தொண்டர் அணியினர் திரளாக கலந்துகொள்ளுமாறும்

நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில - மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றியக் கழக செயலாளர்கள் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.





கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க .ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரைக் கூட உச்சரிக்காமல் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிராக நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன பொதுக்கூட்டம் ராசிபுரம் புதிய பஸ் நிலையம் அருகே நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவரை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், மாநில மாணவரணி துணைச் செயலாளர் சேலம் இரா. தமிழரசன், தலைமைக் கழக பேச்சாளர் நெய்வேலி தங்கம், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் ப.ராணி, நகரக் கழகச் செயலாளர் என்.ஆர்.சங்கர், மாவட்டப் பொருளாளர் ஏ.கே.பாலச்சந்திரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கே.பி. இராமசுவாமி கே.பி .ஜெகநாதன் ஆர்.எம்.துரைசாமி, நகர மன்றத் தலைவர்கள் நாமக்கல் கலாநிதி, இராசிபுரம் கவிதா சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.